## ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

**2019** ம் ஆண்டு **செப்டம்பர்** மாதம் **30** ம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் **4.00** மணியளவில் நடைபெற்ற **சாதாரணக்** கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :- திரு. கா. சுப்பையா,**
**தனி அதிகாரி.**

**பொருள் எண் : 237**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2019 ம் தேதிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 238**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் 25 கணிணிகளுக்கு K7 Anti Virus மென்பொருள் நிறுவி கணிணியில் பதிவு செய்து கோப்பு விவரங்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேற்படி கணிணிகளுக்கு நிறுவிய K7 Anti Virus 25.09.19 ல் அதன் இயக்க காலம் முடிவடைகிறது. எனவே K7 Anti Virus மென்பொருள் புதியதாக நிறுவி ( OS software ) பாதுகாக்கப்படவும், தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து புதிய K7 Anti Virus மென்பொருள் வாங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.25,000/ நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2019/E1

**பொருள் எண் : 239**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் உள்ள தொலை தொடர்பு துறை அலுவலக கட்டிடங்கள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் 2005-06 முதல் 2010-11 ம் ஆண்டு வரை உள்ள காலங்களில் Department of telegram என்ற மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வந்ததாகவும், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடங்களுக்கு Article 285 (1) என்ற விதிகளின்படி மாநில அரசு சொத்துவரி விலக்கு அளிக்க வேண்டும் என்பது குறித்து நகராட்சி வழக்கறிஞர் அவர்களிடம் சட்ட கருத்துரு கோரப்பட்டதில், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடங்களுக்கு Article 285 (1) என்ற விதிகளின்படி சொத்துவரி விலக்கு தொடர்பாக திரு. எஸ். சௌந்திரராஜன் நகராட்சி வழக்கறிஞரால் சட்ட கருத்துரு வழங்கப்பட்டதற்கு, வழக்கறிஞர் கட்டணம் ரூ.2000/- ஐ நகராட்சி வழக்கறிஞருக்கு பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 5429/2019/A1

**பொருள் எண் : 240**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண் 44555/2013/P3, Dated:29.08.2019 ல் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் குறித்து Swachhata hi seva Plastic waste shramdan என்ற தலைப்பில் பொது மக்கள் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட நிகழ்ச்சிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ,2,00,000/ க்கு மன்றத்தின் முன் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** 1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
ந.க.எண் 5265/2019/H1

**பொருள் எண் : 241**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 33 வார்டுகளிலும் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளில் மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை தரம் பிரித்து பெறப்படுகிறது. இவற்றில் மக்காத கழிவுகளை மறு சுழற்சிக்குரிய கழிவுகள் தவிர ஏனைய மக்காத கழிவுகளை தனித்தனியாக சேமித்து வைப்பதற்கு ( Resource Recovery Centre ) வள மீட்பு மையம் ஒன்று நகராட்சி உரக்கிடங்கில் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7,80,000/ ஐ நகராட்சி பொது நிதியின் 2019-20 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

**அலுவலகக்குறிப்பு :-** *மன்றம் அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 2019/E1

**பொருள் எண் : 242**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வாழைக்குளம் ஒத்தத் தெரு மற்றும் பேட்டை கடைத் தெரு சந்திப்பில் உள்ள சிறுபாலம் மிகவும் தாழ்வாக உள்ளதால் அவற்றை இடித்து அப்புறப்படுத்தி புதிய சிறு பாலம் அமைக்க பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.54,000/ ஐ நகராட்சி பொது நிதியின் 2019-20 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

**அலுவலகக்குறிப்பு :-** *மன்றம் அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 2019/E1

**பொருள் எண் : 243**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மேல்பக்க தெருவில் உள்ள சமுதாய கழிப்பறைக் கட்டத்தில் உள்ள பழுதுகளை நீக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.70000/ ஐ நகராட்சி பொது நிதியின் 2019-20 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

**அலுவலகக்குறிப்பு :-** *மன்றம் அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 2019/E1

**பொருள் எண் : 244**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 1 தாழையூத்துப்பட்டி தட்டாங்குளம் தெருவில் உள்ள சமுதாய கழிப்பறைக் கட்டிடத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின் மோட்டார் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,60,000/ ஐ நகராட்சி பொது நிதியின் 2019-20 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

**அலுவலகக்குறிப்பு :-** *மன்றம் அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 2019/E1

**பொருள் எண் : 245**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மாரியம்மன் கோவில் செக்கடித் தெருவில் உள்ள சமுதாய கழிப்பறை கட்டிடத்தில் உள்ள பழுதுகளை நீக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2,20,000/ ஐ நகராட்சி பொது நிதியின் 2019-20 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

**அலுவலகக்குறிப்பு :-** *மன்றம் அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 2019/E1

**பொருள் எண் : 246**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் HP Laser Jet Printer 78 A, Canon Toner வகையை சார்ந்த 10 பிரிண்டர்கள் இயக்கப்பட்டு வருகிறது, இமெயில் எடுக்க கணிணி வரி மையத்தில் பிறப்பு இறப்பு சான்றுகள் நகல் எடுத்தல் மற்றும் அலுவலக பணிகள் அனைத்தும் நகல் எடுக்கப்பட்டு வந்தது தற்போது மேற்கண்ட வகையான டோனர்கள் நகராட்சியில் இருப்பு இல்லாத காரணத்தினால் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் பழைய டோனர்கள் 20 எண்ணம் ரீ-பில்லிங் செய்வதற்கு ஆகும் உத்தேச தொகை ரூ.24,000/ க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.*

**அலுவலகக்குறிப்பு :-** *மன்றம் அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 5483/2019/B2

**பொருள் எண் : 247**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 5 குலாலர் தெரு, வெங்கடேஸ்வரபுரம் தெரு, கோட்டைதலைவாசல் நகராட்சி துவக்கப்பள்ளி அருகில் கட்டப்பட்டுள்ள பயன்பாடின்றி உள்ள கட்டிடத்தை சீரமைத்து பள்ளியின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு மேற்படி கட்டிடத்தில் மராமத்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,40,000/ கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 5253/2019/E1

**பொருள் எண் : 248**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 19 கொளூர்பட்டி தெருவில் சமுதாயக் கூடம் கட்டும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2017-18 ன் கீழ் ரூ. 8.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மாவட்ட ஊரக ஊராட்சி முகமை ஆணை ந.க.எண் C3/2537/2017, நாள் 28.12.2017 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகர்மன்றத் தீர்மான எண் 555 நாள் 31.01.2018 ன் படி திரு. ஸ்ரீகுமரன், நகராட்சி ஒப்பந்தகாரருக்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் மேற்படி சமுதாயக் கூடத்தில் ஒரு சிறிய குடும்ப விழாவை நடத்துவதற்கேற்ற வண்ணம் கூடுதல் அளவிற்கு பணி மேற்கொள்ள வேண்டியதிருந்ததால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2017-18 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை காட்டிலும் ரூ.262000/ மதிப்பீட்டிற்கு கூடுதல் பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே கொளூர்பட்டி தெரு வாழ் மக்களின் கோரிக்கையின்படி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையினை ஏற்று மேற்படி கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியின் 2019-20 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2019/E1

**பொருள் எண் : 249**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தின் நுழைவு வாயிலில் உள்ள பழுதடைந்துள்ள சிறு பாலத்தை இடித்து புதிய சிறு பாலம் அமைக்க ரூ.1,65,000/- ( ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும் ) இலட்சத்திற்கு நகர்மன்றத் தீர்மான எண் 233 நாள் 30.08.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 25.09.2019 ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. G. வெங்கடேசன், நகராட்சி ஒப்பந்தகாரர், 131 A/54, மேட்டு நாயுடு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 2.05% அதிகம். |
| 2 | திரு. எம். கே. ஜின்னா, நகராட்சி ஒப்பந்தகாரர், 13/13 A, நந்தவனம் பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.01% குறைவு. |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.01 சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. எம். கே. ஜின்னா, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
ந. க. எண் 5159/2019/E1

**பொருள் எண் : 250**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் மாரியம்மன் கோவில் அருகில் DSP அலுவலகம் முன்பு உள்ள சேதமடைந்து சிறுபாலத்தை அகற்றி விட்டு புதிய பாலம் அமைக்கும் பணியை ரூ.42000/ மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 05.09.2019 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 06.09.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.*

| வ.எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு. G. வெங்கடேசன், நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>131 A/54, மேட்டு நாயுடு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 40215/- |
| 2 | திரு. எம். கே. ஜின்னா, நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>13/13 A, நந்தவனம் பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 40830/- |
| 3 | திரு. அ. சடையப்பன், நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>4, செட்டியக்குடித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 42200/- |

**அலுவலகக்குறிப்பு :-** *வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.40215/- திரு. கோ. வெங்கடேசன், நகராட்சி ஒப்பந்தக்காரர் தந்துள்ள விலைப் புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.*

*ந. க. எண் 5253/2019/E1*

**பொருள் எண் : 251**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது பிரிவில் அலுவலக முன் பணம் ரூ.1000/ பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி அலுவலகத்தில் ஜெராக்ஸ் மிஷின் இல்லை, மேலும் ஆய்வு கூட்டத்திற்கு தேவையான பொருட்கள், பிரிவு எழுத்தர்களால் அலுவலகத்திற்கு தேவையான கோப்புகளின் ஜெராக்ஸ் நகல்கள் அனைத்தும் அச்சகம் மூலம் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதால் 01.10.2019 முதல் அலுவலக முன் பணம் ரூ.1000/ விருந்து ரூ.2000/ உயர்வு செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

**அலுவலகக்குறிப்பு :-** *மன்றம் அனுமதிக்கலாம்.*

**பொருள் எண் : 252**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி உள்ளூர் குடிநீர் திட்டம் செண்பக தோப்பு பேயனாற்று 7 வது உறை கிணற்றை சுற்றி அருகில் உள்ள கல் மண் ஆகியவற்றைக் கொண்டு JCB இயந்திரம் மூலம் நிரப்பி மேடு ஏற்படுத்தும் பணியை ரூ.20,000/ மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண் 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 20.09.2019 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 23.09.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.*

| வ.எண் | ஒப்பந்தகாரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை (ஒரு மணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1 | M/s. AVK கன்ஸ்ட்ரக்சன், நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>405 B/2, மாரியம்மன் கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 800/- |
| 2 | AVK கன்ஸ்ட்ரக்சன்,<br>5/82, பஜனை கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 850/- |
| 3 | திரு. ஏ. மகேந்திரன்,<br>181 G/2, மதுரை ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 900/- |

**அலுவலகக்குறிப்பு :-** *வரப்பெற்ற மூன்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.800/- AVK கன்ஸ்ட்ரக்சன், நகராட்சி ஒப்பந்தகாரர் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.*

**ந.க.எண் 5549/2019/E1**

பொருள் எண் : 253

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 9 அசோக் நகரில் உள்ள புதிய பகிர்மானக் குழாய் அமைக்கும் பணி ரூ. 2,40,000/ மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 30.08.2019 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 04.09.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை | சகவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. AVK கன்ஸ்ட்ரக்சன், நகராட்சி ஒப்பந்தகாரர், 405 B/2, மாரியம்மன் கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 209039 | மதிப்பீட்டு தொகைக்கு சமமாக |
| 2 | AVK கன்ஸ்ட்ரக்சன், 5/82, பஜனை கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 221748 | 6.08 % அதிகம் |
| 3 | திரு. ஆர். பொன்னுச்சாமி, 124 A, தைலாகுளம் போஸ்ட், ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 217848 | 4.21 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற மூன்ற விலைப்புள்ளிகளில் ரூ.209039/- மதிப்பீட்டு தொகைக்கு சமமாக M/s. AVK கன்ஸ்ட்ரக்சன், திரு. வி. அழகர்ராஜ், நகராட்சி ஒப்பந்தகாரர் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் 5049/2019/E1**

பொருள் எண் : 254

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மேட்டு தெருவில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடத்திற்கு வண்ணப் பூச்சு, மேற்கூரை பழுது சரி செய்தல் மற்றும் பள்ளியில் காணப்படும் இதர பழுதுகளை சரி செய்து கொடுக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,25,000/ ஐ நகராட்சி கல்வி நிதி 2019-20 ன் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 5750/2019/E1

பொருள் எண் : 255

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஊரணிப்பட்டி தெரு மற்றும் துடியாண்டியம்மன் கோவில் தெருவில் பழுதடைந்துள்ள சிறுமின் விசை மோட்டார், சின்டெக்ஸ் தொட்டியை மாற்றி புதியதாக பெடஸ்டல் டைப் ( Pedastal Type ) தொட்டி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,000/ ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதி 2019-20 ன் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 5751/2019/E1

**பொருள் எண் : 256**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அம்மா உணவகத்தின் பின்புறம் உள்ள தண்ணீர் தொட்டிக்கு மூடி அமைத்தல், அம்மா உணவகத்தின் முன்புறம் சாய்தளத்திற்கும் தெரு சாலைக்கும் இடையே பேவர் பிளாக் கல் பதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8500/ ஐ அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு பணியாக RA 267 ஸ்ரீவி வட்டார வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் மூலம் பணி மேற்கொள்வதற்கும், நகராட்சி பொது நிதி 2019-20 ன் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 5253/2019/E2

**பொருள் எண் : 257**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி திரு.வி.க. மேல்நிலைப் பள்ளியில் RO WATER PLANT அமைக்கும் பணி ரூ. 2.50 ( ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19 ன் கீழ் மேற்கொள்வதற்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. சி 3/2970/2018, நாள் 29.07.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 17.09.2019 தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம். |
|---|---|---|
| 1 | பிரனாவ் அக்வா கேர்ஸ்,<br>5 குப்புசாமி பிள்ளை தெரு, சிவன் கோவில் அருகில், சிவகாசி | 0.037% குறைவு |
| 2 | அக்குவா கேர்ஸ்,<br>4/916 R கருமங் கோவில் எதிர்புறம்,<br>விளாம்பட்டி ரோடு, சிவகாசி. | 0.84% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.37 சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள பிரனாவ் அக்வா கோஸ் சிவகாசி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
**ந.க.எண் 6134/2018/E1**

**பொருள் எண் : 258**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் 2 KVA UPS மூலம் 5 கணிணிகள், ஆணையாளர் அறை கணிணி மற்றும் வருவாய் பிரிவில் உள்ள கணிணி ஆகிய 7 கணிணிகள் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது 2 KVA UPS மற்றும் 10 எண்ணம் பேட்டரிகள் பழுது நீக்கம் செய்து தொடர்ந்து இயக்க முடியாதஅளவிற்கு பழுதடைந்து விட்டது. எனவே பழுதடைந்த 2 KVA UPS மற்றும் 10 எண்ணம் பேட்டரிகள் மாற்றி, புதியதாக 5 KVA UPS மற்றும் 10 எண்ணம் பேட்டரிகள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.2,00,000/ க்கு ( ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) நகர்மன்றத் தீர்மான எண் 229 நாள் 30.08.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 27.09.2019 தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | M/s Star Systems Service,<br>2/424 Sannaci patti villampatti po, Sivakasi. | 198800/- |
| 2 | M/s Genius Slaes and Services,<br>103 A, Jawali kadai street, Sivaksi. | 199900/- |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் ரூ.1200/- குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள M/s Star Systems Service, Sivakasi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 5251/2019/E1**

**பொருள் எண் : 259**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கணிணி பிரிவில் இ மெயில் எடுப்பதற்கும், வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கு கேட்பு அறிவிப்பு பிரிண்ட் எடுப்பதற்கும், குடிநீர் பிரிவில் கேட்பு அறிவிப்பு, குடிநீர் புதிய இணைப்பு வழங்க வேலை உத்திரவு எடுப்பதற்கும் பொது பிரிவில் சம்பள பட்டியல் மற்றும் இதர அன்றாட பணிகளுக்கு பிரிண்ட் எடுப்பதற்கு ஆக மொத்தம் 3 எண்ணம் பிரிண்டர்கள் வாங்குவதற்கு ரூ.60000/- ( ரூபாய் அறுபதாயிரம் மட்டும் ) நகர்மன்றத் தீர்மான எண் 231 நாள் 30.08.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 27.09.2019 தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | M/s Star Systems Service,<br>2/424 Sannaci patti villampatti po, Sivakasi. | 59550/- |
| 2 | M/s Genius Slaes and Services,<br>103 A, Jawali kadai street, Sivaksi. | 59850/- |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் ரூ.450/- குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள M/s Star Systems Service, Sivakasi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 5251/2019/E1**

**பொருள் எண் : 260**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 K 1273 க்கு தகுதிச் சான்று பெறுவதற்கு பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அனுமதியின்படி 28.08.19 அனுமதிக்கப்பட்டதன்படி 01.10.2019 தேதி கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| **வ.எண்** | **வேலையின் விபரம்** | **விலை விகிதம்** | |
|---|---|---|---|
| | | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op centre, Srivilliputtur. | Sp.Spl 177 Rajapalayam Agro Engg Service Co-op Centre Municipal complex, Rajapalayam. |
| 1 | TN 67 K 1273 க்கு பழுது பணி | 13950/- | 14550/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக உள்ள RA 267 ஸ்ரீவில்லிபுத்தூர் பிளாக் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் மற்றும் கூட்டுறவு சென்டர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4999/2019/H2

**பொருள் எண் : 261**

தமிழக அரசு ஊழியர்களுக்கு பண்டிகை முன்பணம் உயர்வு செய்து அரசாணை எண் 240 நிதித்துறை ( ஊதியப் பிரிவு ) நாள் 02./8.2019 ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிக்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 5868/2019/C1

**பொருள் எண் : 262**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் பின்வரும் பணியாளர்கள் தீபாவளி பண்டிகை முன்பணம் கோரி விண்ணப்பம் வழங்கியுள்ளனர்.

| வ.எண் | பிரிவு விவரம் | பணியாளர் எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1 | பொதுப் பிரிவு | 15 | 150000 |
| 2 | வருவாய்ப்பிரிவு | 11 | 110000 |
| 3 | நகரமைப்பு பிரிவு | 2 | 20000 |
| 4 | பொது சுகாதாரப் பிரிவு | 18 | 180000 |
| 5 | பொறியியல் பிரிவு | 5 | 50000 |
| 6 | குடிநீர் விநியோகப் பிரிவு | 9 | 90000 |
| 7 | துப்புரவு பணியாளர்கள் | 112 | 1120000 |
| | | **172** | **1720000** |

மேற்கண்ட விவரப்படி தீபாவளி பண்டிகை முன்பணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 5868/2019/C1

**பொருள் எண் : 263**

சென்னை, தலைமைத் தேர்தல் அலுவலர் அவர்களின் 29.08.2019 ம் தேதிய மின்னஞ்சல் கடிதம் எண் 16000/2019-9 ன் படியும் மற்றும் விருதுநகர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 01.01.2020 தகுதி நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணிக்கு முன் வாக்காளர் எண்ணுடன் கூடுதல் விவரங்களை ரேஷன் கார்டு, பாஸ்போர்ட், வங்கி கணக்கு புத்தகம் ஆதார் கார்டு, உழவர் அடையாள அட்டை, அரசு பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், 10 வது அல்லது 12 வது வகுப்பு மதிப்பெண், பான்கார்டு, மின் அணைப்பு எண் அல்லது குடிநீர் இணைப்பு எண் மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேடு அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றை கம்ப்யூட்டர் மூலம் ஸ்கேன் செய்து evp.ecinet.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் முறையில் வாக்காளர் எண்ணுடன் இணைக்கும் பணியான Elector Verification Programme ( EVP ) என்ற பணியை மேற்கொள்ள உத்திரவிட்டுள்ளார். மேலும் மேற்படி ஆவணங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. இதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதிக்குரிய மொத்த வாக்காளர்கள் 65108 நபர்களுக்கும் வாக்காளர் எண்ணுடன் மேற்படி ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை கம்ப்யூட்டர் மூலம் ஸ்கேன் செய்து evp.ecinet.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் முறையில் இணைக்கும் பணியை தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தனியார் கணிணி நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/- ( ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 1453/2019/A3